இந்திய கப்பல் படை மற்றும் கடலோரக் காவல் படைமூலம் அமைத்தல், செயற்கைக்கோள், வானொலி மற்றும் transformers வழங்குதல், ஆழ்கடல் மீனவர்களுக்கு பேரிடர் குறித்த தகவல்கள் தெரிவிக்கும்பொருட்டு உயர் அதிர்வு தொடர்பு சாதனங்களை உருவாக்கிட 180 கோடி ரூபாய் வழங்குதல், ஆழ்கடல் மீன்பிடி கலன்களுக்கு ரூபாய் 36 கோடி மதிப்பில் அவசர நிலையினைத் தெரிவிக்கும் transmitters வழங்குதல், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.4,025 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த மீன்பிடி கட்டமைப்புகளை உருவாக்குதல், பாதிக்கப்பட்ட மீன்பிடி கட்டுமானங்களை சரிசெய்ய ரூ.48 கோடி தமிழ்நாட்டிற்கு உடனடியாக ஒதுக்கீடு செய்தல் போன்ற கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பாக, கன்னியாகுமரியைச் சேர்ந்த உறுப்பினர்கள், தென் தமிழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், கடலோர மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், என்ன உணர்வில் இருக்கிறீர்களோ அந்த உணர்வை பிரதிபலிக்கிற அரசாக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இருக்கிறது. இதையெல்லாம் உங்களுடைய சார்பாக, தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள். வருகிற காலங்களிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மத்திய அரசினுடைய ஒத்துழைப்பையும், அனுமதியையும், நிதியையும் பெற்று முன்னுரிமை அடிப்படையிலே இதையெல்லாம் செயல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

99—

பேருந்து வசதி

***10614—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2018 மே 31]

உளுந்தூர்பேட்டை பணிமனையிலிருந்து ஏ. குமாரமங்கலம், சிறுபாக்கம், அங்கனூர், நெய்வளை, வடகுறும்பூர், எறையூர், திருக்கோவிலூர் வழியாக திருவண்ணாமலை வரை புறநகர் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

உளுந்தூர்பேட்டை, அங்கனூர், நெய்வளை, திருக்கோவிலூர், திருவண்ணாமலை வழித்தடத்தினுடைய நீளம் சுமார் 81 கி.மீ. ஆகும். மேலும், திருச்சியிலிருந்து திருவண்ணாமலை மற்றும் வேலூர், பெங்களூர் செல்லக்கூடிய பேருந்துகள் ஏ. குமாரமங்கலம், எலவனாசூர்கோட்டை, எறையூர் வழியாக 17 பேருந்துகள்மூலம் 24 நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் 2 நடைகளும், ஆக மொத்தம் 26 நடைகள் இயக்கப்படுகின்றன. இந்த வழித்தடத்தில் இந்தப் பேருந்து வசதியே போதுமானதாக இருக்கிறது. மேலும், இந்த வழித்தடத்தில் போதுமான அளவு நகரப் பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று உளுந்தூர்பேட்டை, திருக்கோவிலூர் செல்லக்கூடிய ஒரு பேருந்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற வழித்தடத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆத்மா திருவடிகளை வணங்கி, தமிழ்நாட்டு மக்களுக்கு மாண்புமிகு அம்மா வழியிலே ஒரு சிறந்த ஆட்சியைக் கொடுத்துக் கொண்டிருக்கிற எளிமையின் சிகரம், தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடி அவர்களையும், துணை முதலமைச்சர் அருமை அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

என்னுடைய உளுந்தூர்பேட்டை பணிமனையிலிருந்து ஏ. குமாரமங்கலம், சிறுபாக்கம், அங்கனூர், நெய்வளை, வடகுறும்பூர்,

எறையூர், திருக்கோவிலூர் வழியாக திருவண்ணாமலை வரை செல்லும் பேருந்து வழித்தடம் கிராமப் பகுதிகளை உள்ளடக்கிய பகுதியாக இருக்கிறது. அந்தப் பேருந்து ஏ. குமாரமங்கலம் வழியாக திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை வரை செல்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது அந்த வழியாகச் செல்லவில்லை. அது எலவனாசூர்கோட்டை, எறையூர், திருக்கோவிலூர் வழியாக திருவண்ணாமலை செல்கின்ற வழித்தடத்தில்தான் அதிகமாகச் செல்கிறது. நான் சொன்ன இந்த வழித்தடம் கிராமப் பகுதியை உள்ளடக்கிய வழித்தடமாக இருக்கிறது. இந்த வழித்தடத்திலே பேருந்து விட வேண்டும் என்று நீண்ட நாட்களாக அந்த மக்கள் கோரிக்கை வைத்துக் கொண்டேயிருக்கிறார்கள். அதைத்தான் இங்கே கேள்வியாக எழுப்பி கேட்டோம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நான் குறிப்பிட்ட வழித்தடத்திலே பேருந்தை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை உடனடியாகச் செய்து கொடுத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதை உடனடியாகச் செய்து கொடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற அந்த வழித்தடம் கிராமப் பகுதியில் செல்லக்கூடிய ஒரு சுற்று வழித்தடம். இருந்தபோதிலும், அந்த வழித்தடத்தில் உளுந்தூர்பேட்டையிலிருந்து திருக்கோவிலூர் வரை செல்கின்ற ஒரு பேருந்தை மாற்றி இயக்குவதற்கு போக்குவரத்துத் துறை அதிகாரிகளை அனுப்பி ஆய்வுகளை மேற்கொண்டு உடனடியாக அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

2018 மே 31]

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை தொகுதி 120 கிராமங்கள் மற்றும் ஊராட்சிகளை உள்ளடக்கிய பெரிய தொகுதி. அங்கு நிறைய கிராமங்களுக்கு இன்னமும் பேருந்து வசதி இல்லாத சூழ்நிலை இருக்கின்றது. மக்கள் 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் நடந்து சென்று பேருந்து ஏறவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சென்று நான் கோரிக்கை வைக்கிறபோதெல்லாம், என்னுடைய உளுந்தூர்பேட்டை தொகுதியில் இன்னும் 5 நகரப் பேருந்துகளை கூடுதலாக இயக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். எந்தக் கிராமத்திற்கும் பேருந்து வசதி இல்லையென்று சொல்ல முடியாத அளவுக்கு பேருந்து வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று நான் பல முறை கோரிக்கை வைத்திருக்கிறேன். விழுப்புரம் மாவட்டத்திலே உளுந்தூர்பேட்டை தொகுதி, கிராமப் பகுதிகள் நிறைந்த தொகுதியாக இருக்கின்றது. அதனால் தனிக் கவனம் செலுத்தி உளுந்தூர்பேட்டை தொகுதியில் நிறைய வழித்தடங்களை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். அதையெல்லாம் நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறைய கிராமங்களுக்கு பேருந்து வசதியில்லை என்று கூறியிருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், பேருந்து வசதி இல்லாத கிராமங்களே இல்லை என்ற அளவிற்கு எல்லாக் கிராமங்களுக்கும் பேருந்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சிறிய கிராமமாக இருந்தாலும் சுமார் அரை கிலோ மீட்டர், ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குக்கூட பேருந்துகளை தமிழகம் முழுவதிலும் இயக்கியிருக்கிறோம். இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்த குக்கிராமங்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டால், அவற்றிற்கு ஏதாவது வழித்தட நீட்டிப்புகளைச் செய்ய முடியுமா என்பதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** மிக்க நன்றி. (குறுக்கீடு) நான் மூன்று முறை கேள்வி கேட்டேன். மூன்றாவது முறை அண்ணன் சொன்னபிறகு ஏற்றுக்கொண்டார்கள். (குறுக்கீடு) பிரச்சினை இல்லை. மிக்க நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அபூபக்கர் இங்கே பாருங்கள். (குறுக்கீடு) என்னுடைய நடவடிக்கைகளை எல்லாம் நீங்கள் விமர்சனம் செய்யக் கூடாது. அவை வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் கையைத் தூக்கியிருந்தால், அதிகாரிகள் சொல்லியிருப்பார்கள். (குறுக்கீடு) இங்கே பாருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதியைப் பொறுத்தவரையில், புளியங்குடியிலிருந்து தென்காசிக்கு செல்லக்கூடிய பகுதியில் திரிகூடபுரம் என்ற ஓர் ஊர் இருக்கின்றது. முன்பு அந்த ஊரிலே அதிகமான போக்குவரத்துகள் இருந்து பேருந்துகள் நிற்கக்கூடிய வாய்ப்பு இருந்தது. இப்பொழுது ஒருசில பேருந்துகள் மட்டும்தான் அங்கே நிற்பதால் அங்குள்ள மக்களெல்லாம் ஆட்டோவிலும் மற்ற வாடகை வாகனங்களிலும் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருப்பதால் திரிகூடபுரம், சொக்கம்பட்டி பகுதியில் இருக்கும் மக்கள் பேருந்துகளைப் பயன்படுத்தக்கூடிய வகையில் அங்கே பேருந்துகளை நிறுத்த வேண்டும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். வடகரையிலிருந்து தென்காசிக்கும், கடையநல்லூருக்கும் இரவு நேரத்தில் முன்பு பேருந்துகள் சென்றுவந்தன, அவையும் தற்போது நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றையும் மீண்டும் இயக்க வேண்டும். அதேபோல வடகரையிலிருந்து அழகியநைனார் அணைக்குச் செல்லக்கூடிய பகுதியிலே முன்பு பேருந்து இயக்கப்பட்டு வந்தது. அங்கும் இப்பொழுது பேருந்துகள் செல்லமுடியாத ஒரு சூழ்நிலை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

2018 மே 31]

இருக்கின்றது. அதற்கும் இந்த அரசு ஆவன செய்யவேண்டும். கறுப்பா நதிக்குச் செல்லக்கூடிய பகுதியில் மலைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். மலைவாழ் மக்களின் குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குச் செல்வதற்கு, காலையிலும், மாலையிலும் பேருந்து இயக்கப்பட்டது. இப்பொழுது அந்தப் பேருந்துகள் இயக்கப்படாத காரணத்தினால் அந்த மலைவாழ் ஏழை மக்கள் ஆட்டோக்களில் அதிகமான பணம் செலுத்திச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி, இந்தப் பகுதிகளில் எல்லாம் முன்புபோல பேருந்துகளை இயக்க வேண்டுமென தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறைய கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். முதலிலே குறிப்பிட்ட கோரிக்கை பஸ் நிறுத்தம்,* stage *பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.* Mofussil *பேருந்து என்கின்ற புறநகர் பேருந்துகளுக்கு குறிப்பிட்ட கிலோ மீட்டர் அளவிலேதான் பேருந்து நிறுத்தங்கள் அளவிடப்பட்டிருக்கின்றன. அதேபோல, நகரப் பேருந்துகளுக்கு* stage *என்பது அளவிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பேருந்து நிறுத்தத்தைப் பற்றி போக்குவரத்துத் துறை அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து, நிச்சயமாக அதிலே* stage *இருந்தால், பேருந்துகளை நிறுத்துவதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோல, மலைவாழ் மக்களுக்குப் பேருந்து வசதி இல்லை என்று சொல்லியிருக்கிறார். அவர் குறிப்பிட்ட அந்த ஊரைப் பற்றி, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய ஊர்களுக்கு எப்படி பேருந்து வசதிகள் செய்யலாம் என்பதையும் ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதற்குண்டான நடவடிக்கை எடுப்பது பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2018 மே 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

100—

பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளி

***4790—திரு. செ. ஸ்டாலின் குமார்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, துறையூர் ஊராட்சி ஒன்றியம், மதுராபுரி ஊராட்சியில் உள்ள நரிக்குறவர் குடியிருப்பில் பழங்குடியினருக்கு உண்டி உறைவிடப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

தொன்மை வாய்ந்த இந்த சபையில் திருவுருவப் படத்திற்குள் நின்று, எங்களுக்கு நாளும் பாடம் நடத்திக்கொண்டிருக்கும் தங்க நிகர் சிங்கத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன். அரசியலில் பெரியார் என்றால் துணிவு, அண்ணா என்றால் அறிவு, எம்.ஜி.ஆர். என்றால் ஈகை, அம்மா என்றால் வீரம். இந்த வரிசையில் சோதனைகளை சாதனைகளாக மாற்றக்கூடிய சரித்திர மனிதர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் என்று நாளைய உலகம் நன்றே கூறும். இல்லை, இன்றே கூறும். மாண்புமிகு அண்ணன் அவர்களையும், பண்பாட்டிற்குரிய துணை முதல்வர் அண்ணன் அவர்களையும் வணங்கி என்னுடைய பதிலை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) நரிக்குறவர் இனத்தை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது குறித்த மத்திய அரசின் ஆணை தற்போது வரை பெறப்படாமல் உள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரை